CC 523/2007 22.09.2025

PW– 10 பாலாஜி த/பெ.ராஜசேகரன்

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)**

1, 2, 5, 6, 7 எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை

டிவிஎஸ் நிறுவனம் என்பது பெரிய நிறுவனம் என்றால் சரிதான். டிவிஎஸ் நிறுவனத்திற்குள் தனி தனியாக டிவிஎஸ் நிறுவனத்தின் பெயரில் பல்வேறு தனியார் நிறுவனங்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த நிறுவனத்தை சுற்றி சுற்றுசுவர் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் அந்த நிறுவனத்தை சுற்றி கண்காணிப்பு கேமராக்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த நிறுவனத்தின் அனைத்து வாயில்களிலும் தனியார் காவலர்கள் உள்ளார் என்றால் சரிதான். அந்த நிறுனத்தில் பொதுவாக 500 முதல் 1000 நபர்கள் ஒரு நாளைக்கு வேலைக்கு வருவார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிரிகள் அந்த நிறுவனத்திடம் ஊதிய உயர்விற்காக போராட்டம் செய்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் அந்த நிறுவனத்தில்தான் பணிபுரிந்தார்கள், நான் வழக்கிற்காக நான் இல்லை என்ற பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த நிறுவனத்தில் எந்த பொருளும் திருடுபோகவில்லை, ஊதிய உயர்வு கேட்டார்கள் என்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நான் புகாரை பெற்று தீர விசாரிக்காமல் எதிரிகள் மீது தவறுதலாக வழக்கு தாக்கல் செய்து, காவல் நிலையத்தில் வைத்து எதிரிகளுக்கு எதிராக வழக்கின் ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல, எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**3 ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

3 ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை,

சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**( 3ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )**